www.padippakam.com

# தமிழீழ விடுதலைப் புலிகளின் நோக்கம் விடுதலையா? கொலைவெறியா??

## பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளே!



### உங்களால் கடத்திச் செல்லப்பட்ட தமிழீழ விடுதலை இராணுவத் தோழர்கள் எங்கே?

### தோழர் யோகன் எங்கே?
### தோழர் சலீம் எங்கே?
### தோழர் பிரசாத் எங்கே?

### எங்கே? எங்கே? எங்கே?

பழையதும், பலம் வாய்ந்ததும், புரட்சிகர ஆயுதப் போராட்டத்தில் முன்னணி வகிப்பதுமான இயக்கம் என்று பறைசாற்றிக் கொண்டு; ஏனைய விடுதலை இயக்கங்களை அரவணைத்துச் செல்வது எமது கடமை என்று கூறிக் கொண்டு கபடநாடகமாடும் உங்கள் வேஷம் கலையும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

பேச்சுவார்த்தைக்கென்று அழைத்து வவுனியாவில் வாகனத்தில் ஏற்றி, வாயையும் கைகளையும் கட்டி, இருக்கைகளுக்குக் கீழே படுக்கவைத்து கடத்திச் சென்ற தமிழீழ விடுதலை இராணுவத்தைச் சேர்ந்த ஐந்து சக போராளிகளான சிவா, யோகன், சலீம், சந்திரன், பிரசாத் ஆகியோரை இரும்பு ஆயுதங்களால் படுமோசமாகத் தாக்கியபின்பு தயாராக வெட்டி வைக்கப்பட்டிருந்த குழிகளைக் காட்டி இவற்றினுள்ளே நீங்கள் சமாதியாக்கப் படுவீர்கள் என்று மிரட்டியமை மொசாட் நடவடிக்கைகளுக்கு ஒன்றும் குறைந்ததல்ல. இத்தகைய காட்டுமிராண்டித்தனமான செய்கைகளுக்குப் பொறுப்பாக இருந்து செயற்பட்டவர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வன்னி மாவட்ட இராணுவப் பொறுப்பாளரான மாத்தயா என்பவர் ஆவர்.

பழையதும் பலம் வாய்ந்ததும் புரட்சியில் முன்னணி வகிப்பதுமான இயக்கத்தினைச் சேர்ந்தவர்களல்லவா நீங்கள்?

குழிகளைக் கண்ட எமது போராளிகள் பயந்தார்களா? என்று எங்களை விடுதலைப் போராட்டத்தில் இணைத்துக் கொண்டோமோ அன்றே உயிர் பற்றிய கவலை போய்விட்டது. சித்திரவதை செய்து கொல்வதைவிட துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுங்கள் என்று கூறிக்கொண்டு மிகவும் புத்திசாதுரியமாக தோழர் சிவா, தோழர் சந்திரன் ஆகிய இருவரும்

படிப்பகம்

www.padippakam.com

தப்பியோடினர். தமிழீழ விடுதலைப் புலியினர் இவர்களைச் சுட்டபோதும் நடக்க முடியாத நிலையிலும் எமது இயக்கத் தோழர்கள் மனவலிமையுடன் ஓடி மிக அருகிலிருந்த கிராமத்துக்குள் புகுந்து இன்று சிகிச்சை பெற்று வருகின்றனர். மிகுதி மூன்று தோழர்களது நிலை இது வரை என்னவென்று தெரியவில்லை.

களத்தில் ஒற்றுமை காணத் துடித்தவர்களல்லவா நீங்கள்?

அன்று தலைவர் தேவனைக் கொலை செய்தீர்கள். இடையில் பல்வேறு சொல்லொணாத் துயர்களை விளைவித்தீர்கள். இன்று எமது சகபோராளிகள் எங்கே? எங்கே? எங்கே?

எதிரிக்கும் ஒரு தமிழ்த்தாயின் வயிற்றில் உதித்த தமிழீழ விடுதலைப் போராளிக்கும் வித்தியாசம் காணமுடியாத உங்களுக்கெதிராக நாம் ஆயுதம் தூக்கப் போவதுமில்லை. ஆத்திரமடையப் போவதுமில்லை. ஏனெனில் தமிழீழத் தாயின் அவலக் குரல் எங்கள் செவிகளில் தொடர்ந்தும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. தமிழீழ விடுதலை என்னவென்பதை நாம் நன்றாக உணர்ந்தவர்கள்.

தமிழ் பேசும் நல்லுலகே! தமிழீழ விடுதலை விரும்பிகளே! எங்கள் இளைஞர் சக்தி வீணடிக்கப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். வீர விடுதலைக்குப் புறப்பட்ட மறவர்கள் எந்த இயக்கத்தில் இருந்தாலும் மதிக்கிறோம். மூன்று தமிழ் வீர மறவர்கள் மூவாயிரம் சிங்களச் சிப்பாய்களுக்கு ஈடு இல்லாது விட்டாலும் முப்பது சிப்பாய்களுக்காவது பதில் சொல்ல மாட்டார்களா? இந்நிலை தொடருமாயின் தமிழீழம் கிடைப்பது எப்போது? இத்தகைய நடவடிக்கைகள் எங்கள் விடுதலையை பின்தள்ளமாட்டாவா?

## தமிழீழத்தின் எதிரி யார்? யார்? யார்?

## தமிழீழப் போராளிகள் எங்கே? எங்கே? எங்கே?

## தமிழீழம் உதிப்பது எப்போ? எப்போ? எப்போ?

தமிழீழ விடுதலை இராணுவம் (TELA)

7-7-1985

914 46,53

படிப்பகம்